தொகுதியில் நெசவாளர் குடும்பங்கள் மிக அதிகமாக இருப்ப தாலும், இந்த ஆண்டில் அல்லது அடுத்த ஆண்டிலாவது நூற்பாலையை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வடாற்காடு மாவட்டத் திலுள்ள நூற்பாலையைத் தவிர மேலும் 17 நூற்பாலைகள் இருக்கின்றன. இந்த நூற்பாலைகளில் மாதம் ஒன்றுக்கு 13.52 லட்சம் கிலோகிராம் சிட்டா நூலும், 11.52 லட்சம் கிலோகிராம் கோன் யார்ன்-கோன் நூலும் உற்பத்தி செய்து வருகிறோம். தற்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவை யான உபரி நூலைத்தான் நாம் உற்பத்தி செய்து வருகிறோம் என்பதை இந்த அவையின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

9—

வாசுதேவ நல்லூர் தொகுதி, குலசேகரப்பேரி ஏரியில் உடைப்பை அடைத்தல்

*10249— திரு. ஆர். ஈஸ்வரன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, திருமலா புரம் கிராமம், குலசேகரப்பேரி ஏரியின் உடைப்பை அடைப்ப தற்கு முன்னணை போடப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சரி செய்து மராமத்து வேலைகள் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். திருமலாபுரம் கிராமம், குல சேகரப்பேரி குளத்தில் இரண்டு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு அவை அடைக்கப்பட்டுள்ளன. தற்காலிகமாக அடைக்கப்பட்ட இடத்தில் பின் அதை நிரந்தரமாக்கும் எண்ணத்துடன் அலை கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. தற்போது கரை பலமாக இருப் பதால் வேறு மராமத்து பணிகள் தேவையில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

முற்பகல் 10—30.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலாபுரம் கிராமம், குலசேகரப்பேரி ஏரி சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. சுமார் 2500 ஏக்கர் பாசன வசதி அளிக்கக்கூடியது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் அந்தக் குளம் இரண்டு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு, அது முன்னணை செய்து, அது திரும்ப அப்புறப்படுத்தப்படவில்லை. அந்தக் குளம் நிறை குளமாக இருக்கிற நேரத்தில், அதைப் பார்க்கும்போது, மூன்று குளங்கள் மாதிரி இருக்கும். தண்ணீரினுடைய அளவு ரொம்பக் குறைவாக இருக்கும். ஆகவே, அந்த உடைப்பை, முன்னணையை அப்புறப்படுத்தி, அதைப் மராமத்து செய்ய வேண்டும் என்று சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை அதிகாரிகள் மதிப்பீட்டையெல்லாம் தயார் செய்து உங்களுடைய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆனால் அதை எடுப்பதற்கு தேவையில்லை என்று சொல்வது தவறான கருத்து. * *

நான் நேரடியாகப் பார்த்த அளவில், அந்தக் கிராமத்தில் இருக்கிற அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களும், நானும் நேரடியாக அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குக் காட்டி, உடனடியாக அதை அப்புறப்படுத்தினால்தான் சரியாக இருக்கும் என்று சொல்லி, உங்களுடைய துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் பரிந்துரையை உங்களுக்குச் செய்திருக்கிறார்கள். * * மீண்டும் இதை மறுபரிசீலனை செய்து, அந்த முன்னணையை அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எப்போது அதை அப்புறப்படுத்துவீர்கள் என்பதை இந்தச் சட்ட மன்றத்தில் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்று சொன்னால் அமைச்சர் மீது குற்றம் சாட்டுவது போல வரும். (குறுக்கீடு) அமைச்சர் சொல்கிறார், நான் நேரடியாகப் பார்த்தேன், அப்படி இல்லை என்று நீங்கள் சொல்லலாம். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம். (குறுக்கீடு). அதிகாரிகள் கொடுக்கிற தகவல்களுக்கு முழுப் பொறுப்பும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு தான் சொல்கிறார்கள். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு மாதிரி சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு). அமைச்சர் அதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டுதான் சொல்கிறார். கேள்வி நேரத்தில் அது கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

அதிகாரிகளைக் கூட கேள்வி நேரத்தில் குற்றம் சுமத்தக்கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். கேள்வி நேரத்தில் சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீக்கப் பட்டதையே திரும்பத் திரும்பச் சொல்லாதீர்கள் (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் அது வலுவாக இருக்கிறது என்கிறார். இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் அது கூடாது. திரும்பத் திரும்பச் சொன்னால் எப்படி? நீங்கள் விதிமுறைப்படி நடப்பதாக இருந்தால், இருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே, அதிகாரிகளைப் பற்றி எந்தக் குற்றச் சாட்டும் சொல்லக் கூடாது. (குறுக்கீடு). உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் முடியாது. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்மாயினுடைய அளவு, நீளம் எல்லாம் அவருக்குத்தான் தெரியும். இங்கே இருக்கின்ற அமைச்சருக்கு நீளம், அகலம் எல்லாம் கொடுக்கின்ற குறிப்புகளை வைத்துத்தான் சொல்ல முடியும். அல்லது நேரடியாக அமைச்சர் அந்த இடத்திலே இன்ஸ்பெக்சன் செய்து பார்த்தால், அந்த விவரங்களைச் சொல்லலாம். முன்னணை போடப்பட்டதைப் பற்றி அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அந்த உடைப்புகளை அடைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சம்பந்தப்பட்ட உடைப்புகள் அடைக்கப்பட்டு இருக்கின்றன, கரையில் அலைக்கற்கள் பதிக்கப்பட்டு இருக்கின்றன என்று தகவல் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தக் கரை முழுவதும் பலப்படுத்தப்பட்டு இருக்கிறது, அந்தக் குளங்கள் பூராவும் சீரமைக்கப்பட்டு இருக்கிறது என்ற பதிலை நான் சொல்லவில்லை. உடைப்புகள் அடைக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியிலே அலைக்கற்கள் பதிக்கப்பட்டு இருக்கின்றன என்று சொல்கிறோம். ஒரு குளம் என்று சொன்னால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்து தரக்கூடிய குளங்களிலே உடைப்புகள் ஏற்படலாம். மொத்தமாக அந்தக் குளங்களைச் சீரமைப்பதற்கு பல லட்ச ரூபாய் செலவாகும். 666 கோடி அளவிற்கு வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது 6 கோடி தந்தால் எப்படி அடைப்பது? இருக்கின்ற பிரச்சினையே இதுதான், ஆகவே. இன்றைக்கு தமிழகத்திலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு, இந்த அரசு பல்வேறு முனைகளிலே செயலாற்றி இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குளங்களையும் சீரமைப்பதற்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும். இதற்குக் கூட உலக வங்கியிலே திட்டம் போட்டுத்தான் பணம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கே இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துச் செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் சொல்வதைப் போல,

1994 மார்ச் 17]

வாசுதேவநல்லூரில் உள்ள அனைத்துக் குளங்களையும் அடைக்க வேண்டும் என்றால், அதற்கே பல கோடி ரூபாய் தேவை. இதற்கு அவர், முனைந்து, நிதிகளைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சில விவரங்களை அதிகாரிகள் தருகிறார்கள். அந்த விவரங்கள் அனைத்தும் தவறு என்று சொல்ல முடியாது. அதில் ஏதாவது மாறுபட்ட கருத்து இருக்குமானால், உறுப்பினர் அவர்கள் இந்தமாதிரி இருக்கிறது, இதற்கு என்ன விவரங்கள் என்று கேட்டால், அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறான தகவலைத் தந்தால் நான் அவர்களைக் கூப்பிட்டு விசாரித்து, ஏன் இப்படி தவறான தகவலைத் தருகிறீர்கள் என்று சொல்லி, நடவடிக்கை எடுக்கலாம். அதை விட்டு விட்டு * * சில விவரங்களைப் பேசுகின்ற போதுதான், பிரச்சினையே வருகிறது. குறிப்புகளிலே ஏதாவது தவறு இருந்தால் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டேன். * * என்பது வேண்டாம். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: தலைவர் அவர்களே விவரங்கள் கொடுக்கிறபோது, அந்த விவரங்களிலே குறைபாடுகள் இருக்கிறது) அதை நீங்கள் விசாரிக்க வேண்டும் என்று கேட்டால், அதற்கு பதிலை நான் சொல்ல முடியும். ஆகவே, அவர்கள் கேட்டிருக்கிற பிரச்சினைக்குச் சொல்கிறேன். உடைப்புகளை அடைத்திருக்கிறோம். அலைக் கற்கள் பதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இதிலே ஏதாவது இன்னும் செய்ய வேண்டிய பணிகள் இருக்குமானால், அதை அரசுக்கு முறையாகத் தெரிவிப்பார்களானால், அது சம்பந்தமாக அரசு முறையாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால், அந்தக் குளத்தில் இரண்டு இடத்தில் உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. தண்ணீரினுடைய அளவு குளத்தில் குறைவாக இருக்கிறது. முன்னணைப் போட்டதை அப்புறப்படுத்தவில்லை. அப்படியே விட்டுவிட்டார்கள். அதனால், அந்த முன்னணையை எடுத்து, ரெகுலராக அந்தக் கரையைப் போடவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை, கேள்வி. நான் அதிகாரிகளிடம் பலமுறை இது சம்பந்தமாக இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பேசி இருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

TRUTH ALONE TRIUMPHS

உங்களுக்கும் கூட மனு கொடுத்திருக்கிறேன். சம்பந்தப் பட்ட அதிகாரிகளை, இ. ஈ., போன்றவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து நேரிடையாகக் கரையைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அவர்களே அப்புறப்படுத்தி தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இது வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதைத் தான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகையினாலே மீண்டும் சம்பந்தப்பட்ட வேலைகளை துரித மாகச் செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன் உரிமை கொடுத்து செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரங்களைப் பொறுத்து இருக்கிற பிரச்சினைகளிலே எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமோ அதை முடிவு எடுத்து அரசு பரிசலிக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

10—

விளவங்கோடு தாலுகாவில் பல்வேறு கிராமங்களுக்கு மின்வசதி

*15093—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தாலுகாவில் மின் வசதியற்ற பல் வேறு கிராமங்களுக்கு மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விளவங்கோடு தாலுக்காவில் உள்ள அனைத்து பெரிய மற்றும் குக்கிராமங்களுக்கும் ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டு விட்டன. சில காலனிகளுக்கு மின் வசதி அளிக்க வேண்டும் என்று மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றன.